# இயற்கை கரும்பு...

## 25.12.2012

 

மின்வெட்டுப் பிரச்சனையால் தன்னுடைய கரும்பு தோட்டத்திற்கு சரிவர தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை. ஆனாலும் தக்கைப்பூண்டும் இயற்கை விவசாயமும் தன்னுடைய கரும்பைக் காப்பாற்றிவிட்டதாக நெகிழ்ச்சியோடு சொல்கிறார், தஞ்சாவூர் மாவட்டம் கருவாடிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த அன்புச் செல்வன். இவருக்கு 6 ஏக்கர் நிலம் இருக்கிறது நாலரை ஏக்கரில் இயற்கை முறையில் நெல், தீவனப்புல் சாகுபடி செய்கிறார். ஒன்றரை ஏக்கரில் கரும்புப் பயிர் செய்கிறார். இவர் தோட்டம் செவ்வல் கலந்த மணல்வாரி நிலம் என்பதால், நீரி பிடிப்பே இருக்காது. தண்ணீர் பயாச்சினாலும் கொஞ்ச நேரத்தில் ஆவியாகிவிடும். அதனால் கோடைக் காலத்தில் கரும்புக்கு 15 நாளுக்கு ஒரு முறை அவசியம் தண்ணீர் கொடுத்தே ஆகவேண்டும். இல்லையென்றால் தோகை கருகி தண்டுப்பகுதி சிறுத்து நஷ்டமாகிவிடும். இப்பொழுது கடுமையான மின்வெட்டுப் பிரச்சனையிருப்பதால் மாதத்திற்கு ஒரு முறை தான் தண்ணீர் பாய்ச்ச முடிவதாக கூறுகிறார். தக்கைப் பூண்டு விதைத்ததால் உயிர் மூடாக்காக இருந்து ஈரப்பதத்தை தக்க வைத்தது. அதோடு, கழிகின்ற கரும்புத் தோகைகளையும் மூடாக்காகப் போட்டுவிட்டால் பெரிதாக பாதிப்பு ஏதும் இல்லை. கரும்போட வளர்ச்சி கொஞ்சம் குறைந்தது. ஆனால் பயிர் கருகவில்லை என்று முன்னுரை கொடுத்த அன்புச் செல்வன் தான் மேற்கொண்டிருக்கும் சாகுபடி முறை பற்றி விவரிக்கிறார்.

ஏக்கருக்கு 2 டன் வீதம் மாட்டு எரு பொட்டு, 2 சால் உழவு ஓட்டி ஏக்கருக்கு 15 கிலோ சணப்பு விதையை தெளித்துவிட வேண்டும். அதை, 15-ம் நாள் பூ பூக்கும் தருவாயில் மடக்கி உழுது 20 கிலோ தக்கைப் பூண்டு விதையை விதைத்து, ஒரு சால் உழவு ஓட்ட வேண்டும். 4 அடி இடைவெளியில் பார் அமைத்து, அரையடி இடைவெளியில் கரும்பு கரனைகளை நடவு செய்ய வேண்டும். தொடர்ந்து மண்ணின் ஈரத்தன்மைக்கு ஏற்ப நீர் பாய்ச்சி வர வேண்டும். நடவிலிருந்து 3-ம் மாதம் தக்கைப் பூண்டை அறுத்து, நிலம் முழுக்க மூடாக்காகப் போட வேண்டும். 5 மற்றும் 7-ம் மாதங்களில் கரும்புத் தோகைகளை உரித்து, நிலம் முழுக்க பரவலாக மூடாக்கிட வேண்டும். நடவிலிருந்து 90, 115, 150, 180 ஆகிய நாட்களில் தலா 100 லிட்டர் அமுதக்கரைசலை பாசன நீரில் கலந்து விட வேண்டும்.

சாகுபடித் தொழில்நுட்பங்களைச் சொல்லி முடித்த அன்புச் செல்வன், முன் ரசாயன முறையில் மக்காளச்சோளம் தான் பயிர் செய்திருக்கிறார். அதனால் கெட்டுப்போன இந்த நிலத்தை தக்கைப் பூண்டும் சணப்பும் வளமாக மாற்றிவிட்டதாக கூறுகிறார். தொடர்ந்து அமுதக்கரைசலைப் பயன்படுத்துவதால் நோய் பூச்சி தாக்குதல் என்று எந்தப் பிரச்சனையும் இல்லாமல் நன்றாக வளர்கிறது. கரும்பு இன்னும் சில நாட்களில் அறுவடை செய்துவிடலாம் என்கிறார். எப்படிப் பார்த்தாலும் 15 டன்னுக்கு குறையாமல் மகசூல் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாக கூறுகிறார். சரிவர தண்ணீர் பாய்ச்சாமலே இந்த அளவுக்கு மகசூல் என்றால் அது பெரிய சாதனைதான் எல்லாப் புகழும் தக்கைப் பூண்டுக்குத்தான் என்கிறார் அன்புச் செல்வன்.

**தொடர்புக்கு : அன்பு செல்வன், செல்போன் : 92454 – 06660**

**ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 25.12.12 www.vikatan.com**